**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075866

C

1. District மாவட்டம் : Thiruvallur. PS காவல்நிலையம்: Vigilance & Anti Corruption Year ஆண்டு: 2022 FIR No. மு.த.அ. எண்: 02/AC/2022/TVL. Date நாள்: at 09.30hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 22.3.2022 Date to நாள் வரை : at 11.00hs
24.3.2022 at 12.00hs
Time Period நேர அளவு :
Time from நேரம் முதல் :
Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.3.2022 Time நேரம் : at. 08.30hs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.3.2022 Time நேரம் : at 08.30hs & 09.30hs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North East about 34km
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o the Village Administrative Office. Melakondaiyur village @ Kilkondaiyur village. Thiruvallur Taluk & District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. V. Gopal
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. N. Vasudevan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2022
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி No.440. Gangai Amman Koil Street, Pandikavanur. village. Melakkondaiyur Post, Thiruvallur. Taluk & District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Sarveswari,
Village. Administrative Officer.
Melakkondaiyur. village. Thiruvallur. Taluk & District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Discreet Enquiry was Conducted.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded bribe Amount Rs. 5.000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any :
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed G. Annadurai, Inspector ... Rank ... to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC. Kanchipuram, I/c Thiruvallur. ... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........ பதவி ........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

V. கோபால் 28-03-2022     [signature] 28/3/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு.

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name / பெயர் : G. Annadurai
Rank / நிலை : Inspector of Police. V&AC. Kanchipuram. I/c Thiruvallur.

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்
28.3.2022 at 12:10 hrs.

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.02/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

அனுப்புநர். V.கோபால், ஆ/வ.32, த/பெ.N.வாசுதேவன், எண்.440, கங்கை அம்மன் கோயில் தெரு, பண்டிகாவனூர் கிராமம், மேலக்கொண்டையூர் போஸ்ட், திருவள்ளூர் தாலுக்கா (ம) மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம். அய்யா, நான் மேற்குறிப்பிட்ட முகவரியில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துவிட்டு, தற்போது பெயிண்டராக வேலைபார்த்து வருகிறேன். என் மனைவி பெயர் மகாலஷ்மி எங்களுக்கு லோகேஷ் என்ற 9 மாத ஆண் குழந்தை உள்ளது. எங்களுடன் என் அப்பா, அம்மாவும் வசித்து வருகின்றனர். என் தந்தை வழி தாத்தா திரு.நாராயணரெட்டி அவர்கள் கடந்த 11.08.2008 அன்று இறந்தபிறகு அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களாகிய என் தந்தை திரு.வாசுதேவன் மற்றும் அவருடன் பிறந்த மூன்று இளைய சகோதரிகள் 1)செல்வி.செல்லம்மாள், 2)திருமதி.ராஜகுமாரி மற்றும் 3)திருமதி.விமலா ஆகியோர் இருந்தனர். என் தாத்தா பெயரில் இருந்த பூர்வீக சொத்துக்கள் பட்டா எண்.355 மற்றும் 356-ல் அடங்கிய புன்செய் நிலம் மொத்தம் சுமார் 1ஏக்கர் 66½ செண்ட் நிலத்தினை கடந்த 07.03.2022-ந்தேதி என் தந்தை திரு.வாசுதேவன் பெயரில் மேற்படி பாகம் பிரிப்படாத மொத்த சொத்தில் எனது அத்தைகளின் 4-ல் 3 பாகம் சொத்தினை அக்கு விடுதலை பத்திரமாக தயார் செய்து, திருவள்ளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3138/2022-ஆக பத்திரப்பதிவு செய்து கொடுத்தனர். மேற்கண்ட அக்கு விடுதலை பத்திர பதிவிற்கு பிறகு அந்த நிலம் சம்மந்தமான பட்டா பெயர் மாற்றத்திற்கான கடிதம் பதிவுத்துறை மூலம் வருவாய் துறைக்கு சென்றுவிடும் என்றும் அதன் மூலம் என் தாத்தா பெயரிலிருந்து, என் தந்தையார் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் ஆகிவிடும் என்றும் தெரிவித்து ஒப்புகை சீட்டு (Application No.2022/0103/01/260283) வழங்கினர். அதன்பின்பு நான் பட்டா பெயர் மாற்றம் சம்பந்தமாக ஆன்லைனில் பார்த்தபோது, அது மேலக்கொண்டையூர் VAO விடம் நிலுவையில் உள்ளது என்று தெரியவந்தது. என் தந்தைக்கு வயதாகிவிட்டதாலும், உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், நான் மட்டும் கடந்த 22.03.2022-ந்தேதி காலை சுமார் 11.00 மணிக்கு தற்காலிகமாக கீழ்கொண்டையூர் கிராமத்தில் இயங்கிவரும், மேலக்கொண்டையூர் VAO அலுவலகத்திற்கு சென்று VAO திருமதி.சர்வேஸ்வரி அவர்களை பார்த்து, எனது தந்தையின் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டபோது, அவர் நான் கொண்டு சென்ற பத்திரங்களை வாங்கி பார்த்துவிட்டு, உன் தந்தையின் பட்டா பெயர் மாற்றத்திற்கான மனு ஆன்லைனில் என்னிடம் தான்

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.02/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

நிலுவையில் உள்ளது. அது சம்மந்தமான வேலைகளை நான் செய்து முடித்து திருவள்ளூர் தாலுக்கா அலுவலகத்திற்கு பரிந்துரை செய்து, ஆன்லைன்மூலம் அனுப்பினால்தான் உன் தந்தை பெயரில் பட்டா பெயர் மாற்றம் ஆகும் என்றும், அதனால் அந்த பணிகளை செய்துமுடிக்க பணம் ரூ.8,000/-ம் செலவாகும் என்றும், அந்த பணத்தை கொண்டுவந்து தன்னிடம் கொடுத்துவிட்டு வேலையை முடித்துக்கொள்ளுமாறும் கூறினார். அதற்கு நான் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்து என் தந்தையிடம் விவரத்தை தெரிவித்தேன். அதன்பிறகு மீண்டும் 24.03.2022ந்தேதி காலை சுமார் 12.00 மணிக்கு என் தந்தை திரு.வாசுதேவன் அவர்களை அழைத்துக்கொண்டு கீழ்கொண்டையூர் கிராமத்தில் இயங்கிவரும் மேலக்கொண்டையூர் VAO அலுவலகத்திற்கு சென்று VAO திருமதி.சர்வேஸ்வரி அவர்களை பார்த்தோம். அப்போது மேற்படி VAO அவர்கள் பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக தான் கேட்ட பணம் ரூ.8,000/- ஐ கொண்டுவந்துள்ளாயா என்று கேட்டார். அதற்கு எங்கள் சூழ்நிலையை எடுத்துக்கூறியபோது, அவர் ஏற்கனவே கேட்ட பணத்தில் ரூ.2,000/- குறைத்துக்கொண்டு, ரூ.6,000/- கொடுத்துவிடுமாறு கூறினார். பிறகு நாங்கள் தற்போது உள்ள பணக்கஷ்டத்தை கூறி பட்டா பெயர் மாற்றம் செய்து தருமாறு கேட்டபோது, மேற்படி VAO அவர்கள் மேலும் ரூ.1,000/- குறைத்துக்கொண்டு, கடைசியாக ரூ.5,000/- பணத்தை கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்கள் மனுவை பரிந்துரை செய்வேன் என்று கராராக கூறி தான் கேட்ட பணம் ரூ.5,000/-துடன் வரும் திங்கட்கிழமை (28.03.2022) அன்று கீழ்கொண்டையூர் கிராமத்தில் இயங்கிவரும் இதே அலுவலகத்திற்கு வந்து பணத்தை கொடுக்குமாறு தெரிவித்தார். எனக்கும் எனது தந்தை திரு.வாசுதேவன் அவர்களுக்கும், அவர் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சமாக ரூ.5,000/-ம் பணத்தை, மேலக்கொண்டையூர் VAO திருமதி.சர்வேஸ்வரி அவர்களுக்கு தர விருப்பம் இல்லாததால், அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-துடன், இன்று 28.03.2022-ந்தேதி காலை 08.30 மணிக்கு திருவள்ளூர் விஜிலன்ஸ் அலுவலகம் வந்து மேலக்கொண்டையூர் VAO திருமதி.சர்வேஸ்வரி அவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் V.கோபால்.) 28/03/2022.

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.02/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

Honoured Sir, I received the above complaint on 28.03.2022 at 08.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, enquiry conducted in a discreet manner. Based on the outcome of the Discreet enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tmt.Sarveswari Village Administrative Officer, O/o. Village Administrative Officer, Melakondaiyur, Thiruvallur Taluk & District Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.02/AC/2022/TVL, u/s 7 of The Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018) on 28.03.2022 at 09.30 hrs. The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Thiruvallur. Copies send to Officers concerned and took-up the investigation.

28/3/2022

i/c **INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001,**